

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் ஸ்தோத்ரங்கள்

ஸ்ரீ சுரபி ஜகத்குரு சதாப்தி பப்ளிகேஷன்ஸ்
சென்னை 600 033

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் ஸ்தோத்திரங்கள்

வெளியீடு :

ஸ்ரீ சுரபி ஜகத்குரு ஸதாப்தி பப்ளிகேஷன்ஸ்

158/12, லேக்வியூ ரோடு, மேற்கு மாம்பலம்,

சென்னை-600 033, போன் : 42668005

பொருளடக்கம்

1	அபிதகுஜாம்பாஸ்தவம்	4
2	ஹரிஹராபேதஸ்துதி	9
3	ஸ்ரீ மார்க்கபந்து ஸ்தோத்திரம்	15
4	ரத்நத்ரய பரீக்ஷா	18
5	பஞ்சரத்ன ஸ்துதி	28
6	ஸ்ரீ நிக்ரஹாஷ்டகம்	32
7	ஸ்ரீ கங்காதராஷ்டகம்	37

முன்னுரை

நமது அனாதியான ஸனாதன தர்மத்திற்கு ஆணிவேராக இருப்பது வேதங்களேயாகும். அப்படிப்பட்ட வேதமதம் தீனதசையை அடைந்தபொழுது தக்ஷிணாமூர்த்தியான பரமேஸ்வரன் சங்கரராக அவதரித்து துர்மதங்களை அடக்கி ஷண்மதங்களை நிலைநாட்டினார். பிறகு காலக்ரமத்தில் ஆஸ்திக மதங்களுக்கு மீண்டும் கஷ்டங்கள் ஏற்பட்ட ஸமயம் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு பரமேஸ்வரன் அப்பய்ய தீக்ஷிதர் என்ற திருநாமத்துடன் அவதரித்து 104 நூல்களை இயற்றி தெய்வபக்தியை வளர்த்து ஆஸ்திகத்தை நிலைபெறச்செய்தார். ஒன்றுக்கொன்று முரணாகத்தோன்றும் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம், சைவம் முதலிய எல்லா மதங்களும் இறுதியில் ஒரே இடத்திற்கு செல்பவையே என்று நிரூபிக்க பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் சிவபெருமானைப் பற்றிய பஞ்சரத்னஸ்தவம், விரிஞ்சிபுரத்தில் கோயில் கொண்டுள்ள பெருமானைப்பற்றிய மார்க்கபந்து ஸ்துதி, பஞ்சபூத ஸ்தலங்களுள் தேஜஸ் ஸ்தலமான திருவண்ணாமலையில் விளங்கும் அம்பாளைப் பற்றிய அபீதகுசாம்பாஸ்தவம் மக்களுக்கு சீதஜ்வரத்தை நிவர்த்தி செய்யும் சக்திபெற்ற ஸ்லோகம், சிதம்பரத்தில் விளங்கும் நடராஜ - கோவிந்தராஜப் பெருமான்களைப் பற்றியதும், சிவ-விஷ்ணு அபேதத்தை விளக்குவதுமான ஹரிஹராபேதஸ்துதி, சிவ-அம்பா-விஷ்ணு தத்வங்களை விளக்கும் ரத்னத்ரய பரிக்ஷை, சிவபெருமானின் பெருமையை விளக்கும் கங்காதராஷ்டகம், மக்கள் வெளியில் செல்லும்போது எந்த விதமான இடையூறும் இல்லாமல், எதிரிகளிடமிருந்து காக்கும் கடவுளான சிவபெருமானைப் பற்றி நிக்ரஹாஷ்டகம் ஆகிய ஸ்லோகங்களுக்கு தமிழில் பொருள் - கருத்துக்களையும் வெளியிட முனைந்துள்ளோம். தமிழறியும் அறிஞர்கள், இந்த நூலின் மூலம் பொருளுணர்வுடன் அந்தந்த பகவத் மூர்த்திகளை துதித்து இதன் மூலம் எல்லா மங்களங்களையும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஸ்ரீ காஞ்சீ ஜகத்குரு ஆசார்யாள் அருளுடன் வெளியிட்டு மகிழ்கிறோம்.

எம்.எஸ். அருணாசலம்

श्री मात्रे नमः

।। श्री अपीतकुचाम्बा स्तवः ।।

ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதரவர்கள் அருளிய

அபீதகுசாம்பாள் ஸ்தவம்

आनन्दसिन्धुलहरीं ममृतांशुमौले:
आसेविनाममृत निर्मित वर्तिमक्ष्णो: ।
आनन्दवल्लि विततेरमृतार्द्रगुच्छम्
अम्ब स्मराम्यहमपीत कुचे वपुस्ते ।। १।।

ஆனந்த ஸிந்துலஹரீம் அம்ருதாம்மா மௌளே:
ஆஸேவினும் அமிருத நிர்மித வர்த்தி மக்ஷ்ணோ:।
ஆனந்த வல்லி விததே: அம்ருதார்த்ரகுச்சம்
அம்ப ஸ்மராம்யஹம் – அபீத குசே வபுஸ்தே।।1

(பொருள்) உண்ணு முலையாளாக விளங்கும் ஏ அன்னையே! சந்திரமௌளீச்வரனுக்கு ஆனந்தமாகிய ஆற்றின் வெள்ளம் போல் விளங்குவதும் சேவிப்பவர்களுடைய கண்களுக்கு அமுதமயமான வர்த்தியாய்த் தோன்றுவதும், களிப்பாகிய கற்பகக் கொடியின் அமுதம் ததும்பும் பூங்கொத்தாயும் விளங்கும் உனது திருமேனியை நான் நினைக்கிறேன்

निर्निद्र कोकनद कोमलकान्तमम्ब
नित्यं सुधानिकरवर्षि पदं त्वदीयम् ।
मूर्छाकरज्वररुजा मम तापितस्ज
मूर्ध्नि क्षणं सकृदपीतकुचे निधेहि ।।२।।

நிர்நித்ர கோகநத கோமல காந்தமம்ப
நித்யம் ஸுதாநிகரவர்ஷி பதத் த்வதீயம் ।
மூர்ச்சாகர ஜ்வரருஜா மம தாபிதஸ்ய
மூர்த்னி க்ஷணம் ஸக்ருதபீதகுசே நிதேஹி।। 2

பொருள் ஏ உண்ணுமுலையாளே! அன்னையே! மூர்ச்சையைக் கொடுக்கும் கடுமையான ஜ்வரத்தின் மிகுதியால் தாபமடைந்த எனது தலையின் மீது மலர்ந்த செந்தாமரையின் மென்மையும் அழகும் அமைந்ததும் எப்பொழுதும் அமுதவெள்ளத்தைப் பெருக்குவதுமான உனது திருவடியை ஒரு தரம் கணப்பொழுதாவது வைக்க வேண்டும்

शीतांशुकोटि सुषुमाशिशिरैः कटाक्षैः
अव्याजभूत करुणारस पूर पूर्णैः ।
कर्पूर धूलिमिव दिक्षु समाकिरद्भिः
अम्ब क्षणं स्नपय मामरुणाद्रिमान्ये ॥३॥

சீதாம்சுகோடி ஸுஷுமா சிசிரை: கடாக்ஷை:
அவ்யாஜபூத கருணாரஸ பூர பூர்ணை:।
கர்ப்பூர தூலிமிவ திக்ஷு ஸமாகிரத்பி:
அம்ப க்ஷணம் ஸ்னபய மாம் அருணாத்ரிமான்யே 3

பொருள்: ஏ அன்னையே! அருணகிரிநாதனால் போற்றப்பட்டவளே! கோடிக்கணக்கான சந்திரகாந்தி போல குளிர்ச்சியாயும் இயற்கையில் அமைந்த கருணையின் வெள்ளம் நிறைந்ததும் கர்ப்பூரப்பொடியை திசைகளில் இறைப்பது போன்றதுமான உனது கடைக்கண் பார்வைகளால் கணப்பொழுது என்னை நனையும்படி செய்ய வேண்டும்.

आविर्भव क्षणमपीत कृचे परस्तात्
अम्ब ज्वरेण महता मम तापीतस्य ।
येन त्वदङ्घ्रिरुचिजाल सुधाप्रवाहे
मग्नस्तदैव तनुताप ममुं त्यजेयम् ।।४।।

ஆவிர்ப்பவ க்ஷணமபீதகுசே புரஸ்தாத்
அம்ப ஜ்வரேண மஹதா மம தாபிதஸ்ய ।
யேன த்வதங்க்ரி ருசி ஜால ஸுதா ப்ரவாஹே
மக்னஸ்ததைவ தனுதாபம் அமும் த்யஜேயம் ॥ 4

பொருள்: உண்ணுமுலையாளே! ஏ அன்னையே! ஜ்வரத்தின் மிகுதியால் கொதிப்படைந்த எனது முன்னிலையில் கொஞ்சநேரம் தோன்றுவாயாக. அவ்விதம் தோன்றுவதால் உனது பாதத்தின் காந்திகளாகிய அமுத வெள்ளத்தில் முழ்கியவனாக உடனே இந்த இந்த உடலின் கொதிப்பை நீக்கிக்கொள்வேன்.

नानाविधैर्नलिनजातलिपि प्रक्लृप्तैः
आनीतमूर्छमधिकं क्षुभितैर्ज्वराद्यैः ।
आश्वासय क्षणमपित कुचे कराग्र
क्रीडाकनत्कनक हल्लक सौरभेण ।।५।।

நாநாவிதை: நலின ஜாதலிபி ப்ரக்லுப்தை:
ஆனீதமூர்ச்ச மதிகம் க்ஷபிதை: ஜ்வராத்யை: ।
ஆச்வாஸய க்ஷணமபீதகுசே கராக்ர
க்ரீடாகனத் கனக ஹல்லக ஸௌரபேண ॥ 5

பொருள்: ஏ உண்ணாமுலையே! பிரும்மதேவன் எழுதிய விதிவசமாக பலவிதமாய் கலக்கத்தை கொடுக்கும் ஜ்வரம் முதலிய உபாதைகளால் கடுமையான மூர்ச்சையை யடைந்த என்னை கையின் நுனியில் விளையாட்டிற்கு வைத்திருக்கும் அழகிய பொற்றாமரை மலரின் நறுமணத்தால் க்ஷணநேரம் களிப்பாரச் செய்ய வேண்டும்.

कण्ठे विषं विषमुचो भुजगाः कपर्दे
पार्श्वे च भूतपतयः प्रमथाश्च भीमाः ।
शोणाचलेश मुपसृत्य भजेत को वा
नस्यात्तवाम्ब सविधे यदि सन्निधानम् ॥ ६ ॥

கண்டே விஷம் விஷமுசோ புஜகா: கபர்தே
பார்ச்வே ச பூத பதய : ப்ரமதாச்ச பீமா:।
ஶோணாசலேசம் உபஸ்ருத்ய பஜேத கோ வா
நஸ்யாத் தவாம்ப ஸவிதே யதி ஸன்னிதானம் ॥ 6

பொருள்: கழுத்தில் விஷம், ஜடையிலோ நஞ்சைக் கக்கும் கொடிய ஸர்ப்பங்கள், பக்கத்திலோ பயத்தையுண்டு பண்ணுகின்ற பூதநாயகர்களான ப்ரமத கணங்கள். இத்தகைய அருணகிரிநாதனை ஏ தாயே! அருகில் உன் ஸான்னித்யம் இல்லாவிடில் யார் தான் சேவிப்பார்.

शक्तिर्जगज्जनन पालन भञ्जनेषु
भोगेषु दिव्यमहिषी तरुणेन्दु मौलेः ।
सिद्धिः करप्रणयिनी तव सन्निधानं
यत्रासि तस्य तदपीतकुचे न जाने॥ ॥७॥

ஶக்திர் ஜகஜ் ஜனன பாலன பஞ்சனேஷு
போகேஷு திவ்யமஹிஷீ தருணேந்து மௌளே:।
ஸித்தி: கர ப்ரணயினீ தவ ஸன்னிதானம்
யண்ணஸி தஸ்ய தபீதகுசே ந ஜானே।।7

பொருள்: சந்திரகலையை சிரத்தில் அணிகின்ற உனது பதியான பரமசிவத்திற்கு உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் போன்ற கார்யங்களில் சக்தியாய் விளங்குகிறாய். போகங்களை அனுபவிப்பதற்கு மஹிஷியாய் விளங்குகிறாய். உனது ஸான்னித்யமே கையில் கிடைக்கும் ஸித்தியாய் உள்ளது. ஏ உண்ணாமுலையாளே! அவருக்கு நீ எவ்விதமாக ஆகவில்லை என்பது எனக்குத தெரியவில்லை. ஈச்வரனின் கார்ய மனைவற்றிற்கும் பராசக்தி தொடர்ந்து இருக்கிறாள் என்று கருத்து.

त्वं साक्षिणी प्रलयभैरव ताण्डवानां
त्वं शोषिणी सहरिधातृ चराचराणाम्।
त्वं मोचिनी सकलसंसृति जालकानां
त्वां ब्रह्मसंविदमपीतकुचे नमामि॥ ॥८॥

த்வம் ஸாக்ஷிணீ ப்ரலய பைரவ தாண்டவானாம்
த்வம் ஶோஷிணீ ஸஹரிதாத்ரு சராசராணாம் ।
த்வம் மோசினீ ஸகல ஸம்ஸ்ருதி ஜாலகானாம்
த்வாம் ப்ரம்ஹ ஸம்வித மபீதகுசே நமாமி।। 8

பொருள்: ஏ உண்ணாமுலையாளே! மஹாப்ரளய காலத்தில் உள்ள பைரவமூர்த்தியின் தாண்டவங்களுக்கு நீ ஸாக்ஷியாகவும் விஷ்ணு, பிரும்மா முதலிய சராசரப்பொருள் அனைவற்றிற்கும் நீயே தலைவி—அல்லது ப்ரளய காலத்தில் மீதமாகவும், வலைபோன்ற வாழ்க்கையிலுள்ள துன்பமனைவற்றையும் விலக்குபவளாயும்

விளங்குகிறாய். பிரும்ம வித்யாரூபிணியான உன்னை வணங்குகிறேன்.

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரவர்கள் ஐந்து பூதக்ஷேத்ரங்களில் தேஜோமயமாய் விளங்கும் திருவண்ணாமலையில் கார்த்திகை ஒளி தர்சனத்திற்குச் சென்றார்கள். அங்கு குளிர், ஜ்வரம் ஏற்பட்டு மிகக்கடுமையாக வருந்திய சமயம் அம்பாளை இத்துதிகளால் வழிபட்டார்கள். உடன் ஜ்வரம் நீங்கியது, கலியிலும் கைகண்ட பயனை அளிக்கும் இந்த துதியை சொல்பவருக்கு வியாதிகள் நீங்கும். ஜ்வரத்தில் வருந்துபவர் அருகில் இதை ஜபித்தால் ஜ்வரம் நீங்கும்.

श्री अपीतकुचाम्बा स्तवः संपूर्णः

॥ हरि हराभेदस्तुतिः ॥

ஹரிஹராபேதஸ்துதி

मारमण मुमारमणं फण धरतल्पं फणधराकल्पम्
मुरमथनं पुरमथनं वन्दे बाणारि मस्म बाणारिम् ।१।

மா ரமண முமாரமணம் பணதர தல்பம் பணதராகல்பம்।
முரமதனம் புரமதனம் வந்தே பாணாரி மஸம பாணாரிம்॥

பொருள்: லக்ஷ்மியின் பதியாயும், பார்வதியின் பதியாயும் ஆதிசேஷனைப் படுக்கையாகவுடையவரும் ஆதிசேஷனை அணியாகக் கொண்டவரும் முரன் என்ற அசுரனைக் கொன்றவரும் த்ரிபுராசுரர்களை அழித்தவரும் பாணாசுரனுக்கு எதிரியும் மன்மதனுக்கு எதிரியுமான ஹரியையும் சிவனையும் வணங்குகிறேன்.

गोनयनमिलानयनं रवि शशि नेत्रं रवीन्दुवह्न्यक्षम् ।
स्मरतनयं गुहतनयं वन्दे वैकुण्ठ मुडुपति चूडम् ॥२॥

கோநயனம் மிளாநயனம் ரவி சசி நேத்ரம்
ரவீந்து வஹ்ன்யக்ஷம் ।
ஸ்மரதனயம் குஹதநயம் வந்தே வைகுண்டமுடுபதி
சூடம் ॥

பொருள்: பசுக்களை மேய்ப்பவனும் விருஷப வாஹனனும் சூரிய சந்திரர்களை கண்களாய் உடையவனும் சூரிய சந்திர அக்னிகளைக் கண்களாய் கொண்டவனும், மன்மதனை புதல்வனாய் உடையவனும் முருகனை மகனாய்க் கொண்டவனும் வைகுண்ட என்றும் பெயருள்ளவனும் சந்திரகலையை சிரஸில் தரித்தவனுமான ஹரியையும் சிவனையும் வணங்குகிறேன்.

कृष्ण तनुमुमार्धतनुं श्वशुरगृहस्थं सुमेरु शृङ्गस्थम् ।
दशवपुषं वसुवपुषं वन्दे भूजानिमखिल भूपालम् ॥३॥

கிருஷ்ணதனு முமார்த்ததனும்
ச்வசுர க்ருஹஸ்தம் ஸுமேரு ச்ருங்கஸ்தம் ।
தசவபூஷம் வஸுபூஷம்
வந்தே பூஜானிமகில பூபாலம் ॥ 3

(பொருள்) கருத்த சரீரத்தையுடையவரும் பார்வதியை பாதி சரீரமாய்க் கொண்டவரும், மாமனாரின் இடமான திருப்பாற் கடலிலுள்ளவரும், மஹாமேரு மலையின் சிகரத்திலுள்ளவரும், பத்துவிதமான அவதாரங்களை எடுத்தவரும், பஞ்சபூதங்கள் சூரியன் சந்திரன் யாகம் செய்பவன் என்ற எட்டு சரீரத்தையுடையவரும், பூதேவியை மனைவியாய்க் கொண்டவரும்,

எல்லா உலகங்களையும் காப்பாற்றுபவனுமான ஹரியையும் சிவனையும் வணங்குகிறேன்.

कुध्रधरमुदग्निधरं जलधिसुताकान्त मगजाकान्तम् ।
गरुडस्थं वृषभस्थं वन्दे पञ्चास्त्रमखिलदिग्वस्त्रम् ॥४॥

குத்ரதரமுதக்னிதரம்
ஜலதிஸுதா காந்த மகஜாகாந்தம் ।
கருடஸ்தம் வ்ருஷபஸ்தம்
வந்தே பஞ்சாஸ்த்ரமகில திக்வஸ்த்ரம் ॥ 4

(பொருள்:) கோடாரியை தரிப்பவரும், (பரசுராமர்) மழுவை தரிப்பவரும், பாற்கடலிலுதித்த லக்ஷ்மியின் கணவரும் மலைமகளான பார்வதியின் கணவனும், கருட வாஹனத்தில் உள்ளவரும், விருஷப வாஹனத்திலுள்ளவரும், சங்கம் சக்ரம் கதை சார்ங்கம் தாமரை என்ற ஐந்து ஆயுதங்களை அணிந்தவரும், திசையனைவற்றையுமாடையாய் அணிந்தவருமான ஹரியையும் சிவனையும் வணங்குகிறேன்.

ब्रह्मसुत मृगादिनुतं गजगिरिवासं गजेन्द्र चर्माङ्गम् ।
सुरशरणं हरिशरणं वन्धे भूदारमखिल (अचल) भूदारम् ॥

பிருஹ்மஸுத ம்ருகாதினுதம்
கஜகிரிவாஸம் கஜேந்த்ர சர்மாங்கம் ।
ஸுரசரணம் ஹரிசரணம்
வந்தே பூதார மகிலபூதாரம் ॥ 5

(பொருள்) பிரும்மதேவனை புதல்வனுய்க் கொண்டவரும், ருக்வேதம் முதலியதால் துதிக்கப் பெற்றவனும், ஹஸ்திகிரியில் வசிப்பவனும்,(வரதராஜன்) யானைத்தோலைப் போர்த்தவனும்,

தேவர்களுக்கு சரணனும், விஷ்ணுவிற்கு சரணனும் (சரணன்–காப்பாற்றுபவன்) பூமிதேவியை மனைவியாய்க் கொண்டவனும், எல்லா உலகங்களுக்கும் பதியாயும் (மலைமகளின் கணவனும்) உள்ள ஹரியையும் சிவனையும் நமஸ்கரிக்கிறேன்.

पार्थसखं मपास्तमखं जलधरकान्तिं जलन्धरारातिम् ।
विधि विनुतं हरिविनुतं वन्दे नीलेशमखिल भूतेशम् ॥६

பார்த்தஸகமபாஸ்தமகம்
ஜலதரகாந்திம் ஜலந்தராராதிம் ।
விதிவினுதம் ஹரிவினுதம்
வந்தே நீலேச மகில பூதேசம் ॥ 6

(பொருள்) அர்ஜுனனுக்கு தோழனும் தக்ஷயாகத்தை அழித்தவனும், மேகம் போன்ற காந்தியுள்ளவனும், ஜலந்தராசுரனைக் கொன்றவனும், பிரம்ம தேவனால் துதிக்கப் பெற்றவனும், நீலாதேவிக்கு பதியும் எல்லா பிராணிகளுக்கும் பதியுமான ஹரியையும் சிவனையும் வணங்குகிறேன்.

पीतपटं ह्यरुण जटं परिमल देहं पवित्र भस्माङ्गम् ।
जलजकरं डमरुकरं वन्दे योगस्थ मखिल योगीड्यम् ॥७॥

பீதபடம் ஹ்யருணஜடம்
பரிமள தேஹம் பவித்ர பஸ்மாங்கம் ।
ஜலஜகரம் டமருகரம்
வந்தே யோகஸ்தமகில யோகீட்யம் ॥ 7

(பொருள்:) பீதாம்பரமணிந்தவரும் சிவப்பு ஜடைகளைத் தரித்தவரும், நறுமணம் கமழும் உடலையுடையவனும் தூய்மையான விபூதியை யணிந்தவனும், சங்கத்தை கையில் ஏந்தியவனும், மருவை கையில் தரித்தவனும் யோக நிலையில் இருப்பவனும், யோகிகளனைவராலும் துதிக்கப் பெற்றவனுமான ஹரியையும் சிவனையும் சேவிக்கிறேன்.

चक्रकरमभयकरं मणिमय भूषं फणामणी भूषम् ।
धृत धनुषं गिरी धनुषं वन्दे गोविन्द मनघगो वाहम् ॥८॥

சக்ரகரமபயகரம்
மணிமயபூஷம் பணாமணிபூஷம் ।
த்ருத தனுஷம் கிரி தனுஷம்
வந்தே கோவிந்த மனக கோ வாஹம் ॥ 8

(பொருள்) சக்கரத்தை கையில் தரித்தவரும், அபயமளிக்கும் கையையுடையவரும், இரத்தினாபரணங்களையணிந்தவரும், நாகரத்தினங்களை அணிந்தவரும், சார்ங்கமென்ற வில்லையணிந்தவரும், மஹா மேருமலையை வில்லாயுடையவனும், பக்தர்களிடம் அன்புள்ளவனும், தூய்மையான ரிஷபத்தின் மீது செல்பவனுமான ஹரியையும் சிவனையும் வணங்குகிறேன்.

मोमारमण स्तवनं पठान्ति भक्तया हरीशयोः कृपाया ।
भुक्त्वेह सकल भोगानन्ते गच्छन्त्यनुत्तमं धाम ॥९॥

மோ மாரமண ஸ்தவனம்
படந்தி பக்த்யா ஹரீசயோ: க்ருபயா ।
புக்த்வேஹ ஸகல போகாந்–
ந்தே கச்சந்த்யனுத்தமம் தாம ॥ 9

(பொருள்) இலக்குமி பார்வதி இவர்களின் பதிகளுடைய ஸ்துதியை பக்தியுடன் படிப்பவர்கள் ஹரி, ஈசுவரன் இவர்களின் கிருபையினால் இவ்வுலகில் எல்லாவித போகங்களையுமனுபவித்து கடைசியில் நிகரற்ற ஸ்தானத்தை யடைகிறார்கள்.

ஹரிஹரபேத ஸ்துதி முடிவு பெற்றது.

वस्तां पिशङ्गं वसनं दिशोवा गरुत्मतायातु ककुद्मता वा।
निद्रातुवा नृत्यतुवाऽधिरङ्गं न वस्तु भेदप्रतिपत्तिरस्ति मे ॥

வஸ்தாம் பிசங்கம் வஸனம் திசோவா
கருத்மதாயாது ககுத்மதாவா ।
நித்ரா துவா ந்ருத்யது வா அதிரங்கம்
நவஸ்து பேத ப்ரதிபத்திரஸ்தி மே ॥

பீதாம்பரத்தையணிந்ததாலும், திசைகளை ஆடையாயணிந்தாலும், கருடன் மீது சென்றாலும் ரிஷபத்தின் மீது சென்றாலும், மேடையில் உறங்கினாலும், ஆடினாலும் எனக்கு சிவன் விஷ்ணு என்ற வேறுபட்ட அறிவு கிடையாது.

இங்கு கூறப்படும் சுலோகங்களில் உள்ள அடைமொழிகள் முதலில் விஷ்ணுவையும் பிறகு சிவனையும் குறிக்கின்றன.

ஸ்ரீமத் தீக்ஷிதரவர்கள் இரு தேவர்களையும் பேதமின்றி வழிபட்டார் என்பது கவனிக்கத்தக்கது.

श्रीमदप्पय्यदीक्षित कृतं

मार्गबन्धु स्तोत्रम्

மார்கபந்து ஸ்தோத்ரம்

ப்ரதிதினம் ஸாயங்காலத்திலும் வெளியில் செல்லும் சமயங்களிலும் இடையூறின்றி கார்ய ஸித்தியடைவதற்கு ஜபம் செய்ய வேண்டியது

शंभो महादेव देव शिव शंभो महादेव
देवेश शंभो शंभो महादेव देव।

சம்போ மஹாதேவ தேவ, சிவ சம்போ மஹாதேவ ।
தேவேச சம்போ, சம்போ மஹாதேவ தேவ ॥

नित्यं चिदानन्दरूपं निह्नुताशेष लोकेश वैरि प्रतापं ।
कार्तस्वरागेन्द्र चपं कृत्तिवासं भजे दिव्य सन्मार्ग बन्धुम् ॥
(शंभो)

நித்யம் சிதாநந்த ரூபம், நிஹ்னுதாசேஷ
லோகேச வைரிப்ரதாபம், கார்த்தஸ்வரா ।
கேந்த்ர சாபம், க்ருத்திவாஸம் பஜே
திவ்ய ஸன்மார்க்க பந்தும் (சம்போ) ॥ 1

(பொருள்) அழிவற்றவரும், அறிவையும் ஆனந்தத்தையும் வடிவமாய்க் கொண்டவரும், தேவர்களின் எதிரியான அஸுரர்களின் கொழுப்பை அடக்கியவரும் மஹாமேரு மலையை வில்லாக அணிந்தவரும், யானையின் தோலை ஆடையாகக் கொண்டவரும், வழியில் நடப்பவர்களின் பயத்தை நீக்கும்

பந்துவாயுமுள்ள பரமசிவனே ஸேவிக்கிறேன்.

अङ्गे विराजद्भुजङ्गं अभ्रगङ्गतरङ्गाभिरामोत्तमाङ्गं
ओंकारवाटीकुरङ्गं सिद्ध संसेविताङ्घ्रिं भजे मार्गबन्धुम् ॥
(शंभो)

அங்கே விராஜத் புஜங்கம், அப்ரகங்காதராங்கா
பிராமோத்த மாங்கம், ஓங்காரவாடீ ।
குரங்கம், ஸித்த ஸம்ஸேவிதாங்க்ரிம்
பஜே மார்க்கபந்தும் ॥ (சம்போ) 2

(பொருள்) ஸர்ப்பங்கள் விளங்கும் அவயவமுள்ளவரும், கங்கையின் அலைவரிசையினுல் அழகிய சிரத்தையுடையவரும், ஓங்காரமாகிய தோட்டத்தில் மான் போல் தோன்றுபவரும், சித்தி பெற்ற முனிவர்கள் ஸேவிக்கும் பாதமுள்ளவரும், வழிநடப்பவரின் ஆபத்தை நீக்குபவருமான பரமசிவனே பஜனம் செய்கிறேன்.

मन्दार भूतेरुदारं मन्दारगेन्द्रसारं महागौर्यदूरं ।
सिन्दूर दूरप्रचारं सिन्धूराजाति धीरं भजे मार्गबन्धुम्॥

மந்தார பூதேருதாரம், மந்தாரகேந்த்ர
ஸாரம் மஹாகௌர்யதூரம், ।
ஸிந்தூர தூரப்ரசாரம், ஸிந்தூராஜாதி
தீரம் பஜே மார்க்கபந்தும் ॥ (சம்போ) 3

(பொருள்) மந்தாரமென்ற கல்பதருவைக் காட்டிலும் கொடையாளியாயும், மந்த்ரமலேமேல் பலமுள்ளவரும், அம்பாளே பாதி தேஹமாயுடையவரும், விருஷபம் மீது ஏறி தூரம் செல்பவரும், ஸமுத்ரம் போல் மிக கம்பீரமாயுள்ளவருமான மார்க்கபந்துவை துதிக்கிறேன்

कन्दर्प दर्पघ्न मीशां कालकण्ठं महेशं महाव्योमकेशम्।
कुन्दाभदनतं सुरेशं कोटिसूर्य प्रकाशं भजे
मार्गबन्धुम्॥ (शंभो)

கந்தர்ப்ப தர்ப்பக்னமீசம், காலகண்டம்
மஹேசம் மஹோவ்யோம கேசம் ।
குந்தாபதந்தம் ஸுரேசம் கோடிஸூர்ய
ப்ரகாசம் பஜே மார்க்கபந்தும் ॥ (சம்போ)4

(பொருள்) மன்மதனின் கொழுப்பை அடக்கியவரும், உலகிற்கு நாயகனும், விஷத்தால் கருத்த கழுத்துள்ளவரும், சிறந்த நாயகனும், ஆகாயத்தை கேசமாயுடையவரும் குந்த புஷ்பம் போன்ற பற்களையுடையவரும் தேவர்களுக்கு நாயகனும் கோடிஸூர்யன் போல் ப்ரகாசமுள்ளவருமான மார்க்கபந்துவை ஸேவிக்கிறேன்.

फालाव नम्रत्किरीटं फालनेत्रार्चिषा दग्धपंचेषु कीटं।
शुलाहतारातिकूटं शुद्धमर्धेन्दुचूडं भजे मार्गबन्धुम्॥
(शंभो)

பாலாவ நம்ரத்கிரீடம், பாலநேத்ராச்சிஷா
தக்த பஞ்சேஷுகீடம் ।
சூலா ஹதாராதி கூடம் சுத்தமார்தேந்து சூடம்
பஜே மார்கபந்தும் ॥ (சம்போ)5

(பொருள்) நெற்றி வரையில் விளங்கும் கிரீடமுள்ளவரும், நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்தவரும், சூலத்தினால் எதிரிகளை அழித்தவரும், பரிசுத்தரும் சந்திரகலையைத் தரித்தவருமான மார்கபந்துவை துதிக்கிறேன்.

अप्पय्य यज्वेन्द्रगीतं स्तोत्रराजं पठेद्यस्तु भक्त्याप्रयाणे।
तस्यार्थसिद्धिं विधत्ते मार्गमध्येऽभयं
चाशुतोषोमहेशः ॥ (शंभो)

அப்பய்ய யஜ்வேந்த்ரகீதம் ஸ்தோத்ரராஜம்
படேத் யஸ்து பக்த்யா ப்ரயாணே ।
தஸ்யார்த்த ஸித்திம் விதத்தே, மார்க்க மத்யே
பயம் சாசு தோஷோ மஹேச: ॥ (சம்போ)6

(பொருள்) அப்பய்ய தீக்ஷிதேந்த்ரர்களால் செய்யப்பெற்ற இந்த சிறந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்யும் பொழுது ஜபிப்பவர்கள் விரும்பிய பயனை அடைகிறார்கள். மேலும் விரைவில் சந்தோஷிக்கின்ற மஹேச்வரன் வழியின் நடுவில் பயமின்றி நம்மை காப்பாற்றுகிறார்.

॥रत्नत्रयपरीक्षा॥

ரத்நத்ரய பரீக்ஷா

(ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் அருளியது)

नित्यं निर्दोषगन्धं निरतिशयसुखं ब्रह्मचैतन्यमेकम्
धर्मो धर्मीतिरूपद्वयमयति पृथग्भूय मायावशेन।
धर्मस्तात्रानुभूतिस्सकल विषयिणी सर्वकार्यानुकूला
शक्तिश्चेच्छादिरूपा भवति गुणगणश्चाश्रयस्तवेकएव ॥१॥

நித்யம் நிர்தோஷகந்தம் நிரதிசய ஸுகம்
ப்ரும்ம சைதன்யமேகம்
தர்மோ தர்மீதி ரூபத்வயமயதி
ப்ருதக்பூய மாயாவசேந ।
தர்மஸ்தத்ரானுபூதிஸ் ஸகல விஷயிணீ
ஸர்வ கார்யானுகூலா
சக்திஸ்சேச்சாதி ரூபா பவதி
குணகணஸ்சாச்ரயஸ்த்வேக ஏவ ॥ 1

(பொருள்) நிகழ்காலம், இறந்தகாலம், வருங்காலம், என்ற மூன்று காலங்களில் தோன்றுவதும், சிறிதும் தோஷமற்றதும், தனக்கு மேலான சுகமற்றதும், ஒன்ருயும், அறிவு வடிவாயுமுள்ள, பரப்ரஹ்மஸ்வரூபம் மாயையின் சேர்க்கையினுல் பிரிவையடைந்து தர்மம் தர்மி என்ற இரு உருவத்தை அடைகிறது. அதில் தர்மம் என்பது ஒன்ருகவே இருந்து கொண்டு தனக்கு இருப்பிடமான தர்மிக்கு எல்லாவற்றையும் விளக்கும் அறிவாயும், கார்யங் களனைவற்றையும் செய்ய உதவியான இச்சை(எண்ணம்) முதலிய சக்தியாயும் மற்றுமுள்ள நற்குணக் குவியலாயும் இருக்கின்றது.

உலகிற்கு காரணமான உபநிடதங்களில் காணப்படும் ப்ரஹ்மம் தன்னிடத்தில் பல்வேறு பொருள்களைக் காண்பிக்கத் தகுந்த சக்தியுள்ளது. அந்த சக்தி மாயையினுல் தோன்றுகிறது. சக்தியின் திறமையை பின்பு கூறுகிறார். எவ்வளவு சக்தி இருந்தாலும் சக்தன் (இருப்பிடம்) ஒன்று தான்; அவனே சிவன்.

वेदज्ञा धर्ममेतप्रवितातमाखिलाधारमाकाशमाहुः
किंचानन्दं मनोवागविषय मधिकं धर्मिणो वर्णयन्ति
सत्तास्फूर्तिस्सुखं च त्रयमयि जगतां संगिरन्तो तदंशाम्
प्राणाका शाद्युपास्तीः कतिचिदपि तदालम्बनास्ते वदन्ति ॥

வேதஞ்ஞா தர்மமேதம் ப்ரவிதத
மகிலாதாரமாகாச மாஹு:
கிஞ்சாநந்தம் மநோ வாகவிஷய
மதிகம் தர்மிணோ வர்ணயந்தி ।

ஸத்தாஸ்பூர்த்தி ஸ்ஸுகம் ச த்ரயமபி
ஜகதாம் ஸங்கிரந்தே தத்ம்சம்
ப்ராணகாசாத்யுபாஸ்தீ: கதிசிதபி
ததாலம்பநாஸ்தே வதந்தி ॥ 2

(பொருள்) இந்த தர்மத்தை எங்கும் நிறைந்ததாயும் எல்லாவற்றிற்கும் இருப்பிடமாயுமுள்ள ஆகாசம் என்று வேதம் அறிந்த பெரியோர் கூறுகின்றனர். மேலும் தர்மியான சிவனுக்கு மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாத பேரானந்தமாயும் வர்ணிக்கின்றனர். உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் இருத்தல், விளங்குதல் ப்ரியமாக இருத்தல் என்ற மூன்று குணங்களுள்ளதாகவே விளங்குகின்றது. இவை ஸத், சித், ஆனந்தம் எனப்படும். இம்மூன்றையும் அந்த தர்மமாகிய சக்தியின் அம்சமாகக் கூறுகின்றனர். மேலும் உபநிடதங்களில் விதிக்கப்படும் ப்ராண ஆகாச உபாஸனங்களையும், இந்த சக்தியைக் கொண்டே அமைந்ததாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

பிருஹதாரண்யகம் என்ற உபநிடதத்தில் இவ்வுலகம் எங்கு நிலை பெற்றிருக்கிறது என்ற கேள்விக்கு ஆகாசத்தில் என்று விடையளிக்கப்பெற்று, ஆகாசம் எங்கென்றதற்கு அக்ஷர ப்ரஹ்மத்தில் என்ற விடை உள்ளது. இங்குள்ள ஆகாசம் என்பது தான் சக்தி. மேலும் ப்ராணன், ஆகாசம் இவைகளிலிருந்து உலகமுண்டாவதால் அவை உபாஸிக்கத் தகுந்ததென்று கூறுகிறது. ஆதலால் அவையும் சக்தியே. சிவனுக்கு ஆனந்தமாயும் விளங்குகிறது.

कर्तृत्वं तस्य धर्मो कलयति जगतां पञ्चके सृष्टिपूर्वे
धर्मः पुंरूपमाप्त्वा सकलजगदुपादान भवं बिभर्ति ।
स्त्रीरूपं प्राप्यदिव्याभवति च महिषी स्वाश्रयस्यादिकर्तुः
प्रोक्तौ धर्मप्रभेदावपि निगमविदां धर्मिवत् ब्रह्मकोटी
॥३॥

கர்த்ருத்வம் தஸ்ய தர்மீ கலயதி
ஜகதாம் பஞ்சகே ஸ்ருஷ்டிபூர்வே
தர்ம: பும் ரூபமாப்த்வா ஸகல
ஜகதுபாதாந பாவம் பிபர்த்தி ।

ஸ்த்ரீரூபம் ப்ராப்ய திவ்யா பவதி ச
மஹிஷீ ஸ்வாச்ரயஸ்யாதி கர்த்து:
ப்ரோக்தௌ தர்மப்ரபேதாவபி
நிகமவிதாம் தர்மிவத் ப்ரும்மகோடீ ॥ 3

(பொருள்) கீழ்சொல்லிய தர்மி, தர்மம் என்றதில் தர்மியாகிய பரமசிவன் உலகங்களை உண்டாக்குவது, காப்பது, அழிப்பது, பந்தமளிப்பது, முக்தியளிப்பது, என்ற ஐந்து காரியங்களிலும், கர்த்தாவாக(செய்பவன்) இருப்பதை அடைகிறார். தர்மமாகிய சக்தி புருஷ உருவத்தையடைந்து உலகமனைவற்றிற்கும் உபாதான காரணமாக (குடத்திற்கு மண்போல்) ஆகிறது. ஸ்த்ரீ உருவத்தையடைந்து தனக்கு இருப்பிடமான ஆதிகர்த்தாவான பரசிவத்திற்கு பட்டமஹிஷியாக ஆகிறாள். கீழ்ச் சொல்லியபடி தர்மம் புருஷ—ஸ்த்ரீ என்ற பிரிவையடைந்தாலும் தர்மியான பரசிவன் போல் ப்ருஹ்ம ஸ்வரூபமாகவே கருதப்படுகிறது.

முதலில் தர்மம் என்ற சக்தி, ஞானம், ஆனந்தம் முதலிய குணமாயும் உலகத்தை படைக்கும் சக்தியாயும் தர்மியை அண்டி சூர்யனிடம் ஒளிபோல் பிரிக்கமுடியாததாக கூறிவிட்டு இங்கு

புருஷ உருவமாய் உலகிற்கு காரணம் ஸ்த்ரீ உருவமாய் பட்டமஹிஷி என்று ஸ்வதந்த்ரமாக தனியாகக் கார்யம் செய்வதாக கூறுவது, உபநிடதங்களில் உள்ள ஸித்தாந்தங்களை விளக்குகிறது. மாயா சக்தியின் திறமை பல்விதமாக விளங்குகிறது என்று அறிய வேண்டும்.

यो सौ धर्मि सशंभुस्स शिव इति परं ब्रह्म चेति प्रसिद्धः
याचोक्ता धर्मिणोस्याविघटित महिषी साम्बिको मेति वित्ता।
यश्चोपादान भूतः पर इह पुरुषश्चैष नारायणोक्त्या
ख्यातः श्रीकूर्मवाक्यैरधिगतमिदं नारतस्यापिवाक्यैः ॥

யோ ஸௌ தர்மீ ஸ சம்புஸ் ஸ சிவ இதி
பரம் ப்ரும்மசேதி ப்ரஸித்த
யாசோக்தா தர்மிணோ ஸ்யாவிகடித
மஹிஷீ ஸாம்பிகோமேதி வித்தா ।
யஸ்சோபா தாநபூத: பர இஹ புருஷஸ்
சைஷ நாராயணோக்த்யா
க்யாத: ஸ்ரீ கூர்மவாக்யைரதி கதமிதம்
நாரதஸ்யாபி வாக்யை: ॥ 4

(பொருள்) கீழ் சுலோகங்களில் தர்மி —தர்மம் என்று கூறப்பெற்றது. அதில் தர்மி என்றவர் சம்பு – சிவன்— பரப்ருஹ்மம் என்று ப்ரஸித்தி பெற்றவர். தர்மியினிடம் பிரிக்கமுடியாத மஹிஷியாய் சொல்லப் பெற்றவள், அம்பிகை உமா என்ற பிரஸித்தியுள்ளவள். புருஷ உருவமாய் உலகிற்கு உபாதான காரணமென்று கூறப்பெற்ற பரமபுருஷன் நாராயணன் என்று ப்ரஸித்தி பெற்றவன். இவ்விதக் கூர்மபுராண வசனங்களாலும் நாரதரின் வாக்யங்களாலும் அறிவிக்கப் பெற்றது.

கூர்ம புராணத்திலும் பரமசிவன் கௌரீ நாராயணன் இருவரையும் இருபுறத்திலும் அமர்த்தி வீற்றிருக்கும் பொழுது தேவ கன்னிகள் இருவரும் யார் என்று வினவ, இவ்விருவரும் நானே, இரு உருவத்துடன் விளங்குகிறேன். எனக்கும் இவர்களுக்கும் பேதம் கிடையாது. எனது உண்மையான உருவத்தை ஒருவரும் அறியார் என்று பதில் கூறுகிறார்.

காஞ்சி மஹிமையை கூறும் ஸ்காந்தத்தில் அரசன் ப்ரபாகரன் விஷ்ணுவை உபாஸித்தான். பட்டமஹிஷி காமாக்ஷியை வழிபட்டாள். இவ்விருவருக்கும் அருள்புரிய விஷ்ணுவே தோன்றினார். இருவரும் திருப்தி அடைந்தனர். மேலும் பல காரணங்கள் புராணங்களில் சிவ சக்திகளே விஷ்ணு அம்பிகை என்பதற்கு உள்ளன.

तस्यैवाद्यस्य पुंसः परिणतिरखिलोप्यंबरादि र्विकारः
तस्यैवांशो विरिंचावधिरिह सकलोप्येष संसारिवर्गः ।
प्राप्यं कृत्वैव तस्य प्रपदनममृतस्याद्यमानन्दमूर्ति
स्थानं भर्गस्य जुष्टं तदमृततनयैर्देव देवैः पुराणैः ॥५॥

தஸ்யைவாத் யஸ்ய பும்ஸ: பரிணதி
ரகிலோப்யாம்பராதிர் விகார:
தஸ்யைவாம்சோ விரிஞ்சாவாதிரிஹ
ஸகலோப்யேஷ ஸம்ஸாரிவர்க: ।
ப்ராப்யம் க்ருத்வைவ தஸ்ய ப்ரபத
மம்ருதஸ்யாத்யமாநந்த மூர்த்தி
ஸ்தாநம் பர்க்கஸ்ய ஜுஷ்டம் ததம்ருத
தநயைர் தேவதேவை: புராணை: ॥ 5

(பொருள்) ஆகாசம் முதலிய எல்லா காரியமும் ஆதிபுருஷனை அந்த நாராயணனின் பரிணமம், (கார்யம்) பிரும்மதேவன் வரையிலுள்ள எல்லா ஜீவராசிகளும் அவருடைய அம்சமே, அமி

ருதன் என்ற ப்ரசித்தி பெற்ற பர்கனுடைய (சிவனுடைய) முதன்மையானதும், ஆனந்தரூபமானதும், மிகப்பழமையான சிரேஷ்டர்களான சிவகுமாரர்களால் ஸேவிக்கப் பெற்றதுமான ஸ்தானத்தை நாராயணனைச் சரணாகதி செய்த பிறகே அடைய வேண்டும்.

நாராயணனே ஆகாசம் முதலிய பஞ்சபூதங்கள் பிரம்ம தேவன் முதலிய ஜீவ வர்கங்கள் அனைவற்றிற்கும் உபாதன காரணம், அவருடைய அனுக்ரஹத்தினாலேயே அழிவற்ற சிவ பதத்தையடையலாம் என்பது இங்கு கூறப்பெற்றது.

ख्याताः कोटयो नवाष्टादश न परिमितास्थाणु वैगुण्ठ वेधः
शक्तीनां यत्कलाशाः त्रिभुवन विषयाश्शंकरस्यैव
भोग्याः।
या विख्याता कृपाब्धिश्श्रुतिशिरसि परब्रह्मविद्याप्रदात्री
साहित्यं सा भवानी भजति नियमतश्शंकरोपासनासु
॥६॥

க்யாதா: கோட்யோ நவாஷ்டாதச
ந பரிமிதாஸ்தாணு வைகுண்ட வேத
சக்தீநாம் யத்கலாம்சா: த்ரிபுவனவிஷயாஸ்
சங்கரஸ்யைவ போக்யா: ।
யா விக்யாதா க்ருபாதிஶ்ருதி
சிரஸி பரப்ரும்மவித்யா ப்ரதாத்ரீ
ஸாஹித்யம் ஸா பவாநீ பஜதி
நியமதச்சங்கரோ பாஸநாஸு ॥ 6

(பொருள்) உமாதேவியின் அம்சங்களான மூவுலகிலும் பரவியிருக்கின்ற சிவசக்திகளான தாமஸமான ஒன்பது கோடி

சக்திகளும் விஷ்ணு சக்திகளான ராஜஸமான பதினெட்டு கோடி சக்திகளும், பிரும்ம சக்திகளான ஸாத்விகமான அனந்த சக்திகளும் பரமசிவனுக்கே போக்யர்கள். கருணைக் கடலென்றும் பிரும்ம ஞானத்தைக் கொடுப்பவள் என்றும் உபநிடதத்தில் பிரசித்தி பெற்ற பவானி உமாதேவி, சிவனை உபாஸிக்கும் பொழுதெல்லாம் சேர்ந்திருப்பதை அவச்யமாய் அடைகிருள்.

சக்திகள் அனைவற்றும் அம்பிகையின் அம்சமாதலால் அந்த சக்திகளையனுபவிக்கும் புருஷர்களும் சிவனுடைய அம்சமாகிறார்கள். பரமசிவனே அந்தந்த ரூபத்துடன் சக்திகளையனுபவிக்கிருர். என்று வராஹ புராணம் ஹரிவம்சம் கூறுகின்றன.

அம்பாளே ப்ரும்ம வித்யையை அளிப்பவள் என்பது கேன உபநிஷத்திலும் தேவர்களுக்கும் பிரும்மத்தையுபதேசம் அம்பாள் செய்தாள் என்பது சான்ருகும். அவளுடன் கூடவே சிவோபாஸனம் செய்ய வேண்டும் என்பது "உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும்" என்பது முதலான உபநிடதங்களில் உள்ளது.

श्रीमत्कूर्मेण याऽत्याश्रमरत विषया भावनोक्ता तृतीया
दिव्यस्थानप्रदात्री सगुणविषयिणी शंकरलम्बना सा ।
ये त्वन्ये भावने ते सरसिजनयने नादिशक्त्या च युक्ते
प्रापिण्यौ ते तु तस्या क्रमिकफलयुते भौतिकं सांख्यमाप्ते ॥

ஸ்ரீமத் கூர்மேண யா த்யாச்ரமரத
விஷயா பாவநோக்தா த்ருதீயா
திவ்யஸ்தாந ப்ரதாத்ரீ ஸகுண விஷயிணீ
சங்கராலம்பநா ஸா ।
யே த்வந்யே பாவநே தே ஸரஸிஜ
நயநே நாதி சக்த்யாச யுக்தே
ப்ராபிண்யௌ தே து தஸ்யா
க்ரமிகபலயுதே பௌதிகம் ஸாங்க்யமாப்தே ॥ 7

(பொருள்) வர்ணாச்ரமங்களைக் கடந்த பரம ஹம்சர்களுக்கு அர்ஹமான ஸ்ரீ கூர்மாவதார மெடுத்த பகவானால் சொல்லப் பெற்ற மூன்றாவதான உபாஸனம் ஸகுண ப்ரஹ்மமான பரமேச்வரனை பற்றியதாக திவ்யபதமான சிவ பதத்தைக் கொடுக்கின்றது. கூர்ம ராஜனால் சொல்லப் பெற்ற மற்ற இரு உபாஸனங்களும் முறையே நாராயணனையும் பராசக்தியையும் பற்றியவை. அவை பௌதிகம், ஸாங்க்யம் என்ற பெயர் கொண்டவை. பற்பல பயனைக் கொடுத்து முற்கூறிய பரமசிவ உபாஸனையை அடைவிக்கின்றன.

கூர்ம புராணத்தில் பௌதிகம் ஸாங்க்யம் அந்திமம் என்று மூன்று உபாஸனங்கள் விதிக்கப்பெற்றன. முன் இரு உபாஸனங்கள் கிருஹஸ்தர்களும் கடைசி உபாஸனத்தில் அத்யாச்ரமிகளும் அதிகாரிகள். முன் இரு உபாஸனங்கள் விஷ்ணு சக்தியைப் பற்றியவை. மூன்றாவது சிவனைப் பற்றியது, சிவபதத்தையளிப்பது. முந்திய உபாஸகர்கள் ஆருருக்ஷுக்கள் என்றும் மூன்றாவது உபாஸகர் ஆருடர் என்றும் கூறப்படுகின்றனர். சக்தி விஷ்ணு உபாஸனம் செய்தவர்களே அவர்கள் அருளால் சிவோபாஸனத்தில் அதிகாரிகளாகின்றனர் என்பது முதலியது கூர்மபுராண வரலாறு.

विद्वांसः शंकरस्य श्रुतिमति महितोपासनावासनाभिः
लब्धस्वान्त प्रतिष्ठास्सुदृढमभिधया तं विलोक्यात्मनैव।
गोलोकस्योर्ध्व भागादपि परमपदाद्वैष्णवस्योर्ध्वदेशे
भास्वत्कोटिप्रभं यान्त्यपुनरपगमस्थानमानन्दरूपम् ॥८॥

வித்வாம்ஸ சங்கரஸ்ய ச்ருதிமதி
மஹிதோபாஸநாவாஸநாபி:
லப்தஸ்வாந்தப்ரதிஷ்டாஸ்ஸுத்ருட
மபிதயா தம் விலோக்யாத்மநைவ ।
கோலோகஸ்யோர்த்வ பாகாதாபி

பரமபதாத்வைஷ்ணவஸ்யோர்த்வதேசே
பாஸ்வத்கோடி ப்ரபம் யாந்த்ய பரூ-
ரபகமஸ்தாந மாநந்த ரூபம் ॥ 8

(பொருள்) பரமசிவனைப் பற்றிய ச்ரவண மனன உபாஸன வாஸனைகளால் ஒருமைப்பட்ட மனதையுடைய வித்வான்கள், மனதினால் பரமசிவனை தன்னோடு அபின்னனாக (ஒன்றாக) நிச்சயமாய் நேரில் பார்த்து (ஸாக்ஷாத்காரம் செய்து) கோலோகத்திற்கும் மேலேயுள்ள நாராயணனுடைய பரமபதம் என்ற லோகத்தைக் காட்டிலும் மேற்பட்ட தேசத்தில் இருக்கின்ற கோடி சூர்யப்ரகாசமான ஆனந்த வடிவமான–திரும்பி வரக்கூடாத ஸ்தானத்தையடைகின்றனர்.

வேதாந்தங்களில் ச்ரவண மனன நிதித்யாஸனம் செய்து ப்ருஹ்ம ஸாக்ஷாத்காரத்தையடைந்தால் மோக்ஷம் ஏற்படுமென்று கூறப்பட்டுள்ளது. அந்த ப்ரும்மம் பரமசிவனே. அவரை ஸாக்ஷாத்காரம் செய்து மோக்ஷமடையவேண்டும். அது சிவபதம் மற்ற உலகங்களுக்கு மேலுள்ளது.

இவ்விதம் மஹாபாரதம் அனுசாஸநபர்வ சிவ தர்மோத்தரம் ஸ்காந்தம் காசீ கண்டம் கூர்ம புராணம் முதலியதில் கூறப்பெற்றது.

अमथ्य भाष्य दुग्धाब्धेः आप्तं रत्नत्रयं ततः ।
शंभुर्गौरी हरिश्चेति तच्च सम्यक्परीक्षितम् ॥

ஆமத்ய பாஷ்ய துக்தாப்தே:
ஆப்தம் ரத்ன த்ரயம் தத: ।
சம்புர் கௌரீ ஹரிச்சேதி
தச்ச ஸம்யக் பரீக்ஷிதம் ॥

இவ்விதம் ஸ்ரீ கண்டாசார்யார்களின் பிருஹ்ம ஸூத்ர பாஷ்யம் என்ற பாற்கடலைக் கடைந்து அதில் ஸாரமான சிவன் விஷ்ணு அம்பாள் என்ற மூன்று ரத்னங்களை எடுத்து நன்கு விசாரிக்கப் பெற்றது.

பஞ்சரத்ன ஸ்துதி

भूतस्य जात इति वारिरुहासनस्य
जातो वृहन्निति हरेश्च जनि : प्रसिद्धा ।
यस्मादजात इति मन्त्र वरोपदिष्टात्
तं रुद्रमेव जनितः चकितः प्रपद्ये ॥१॥

பூதஸ்ய ஜாத இதி வாரிருஹாஸனஸ்ய
ஜாதோ ப்ருஹந்நிதி ஹரேச்ச ஜநி: ப்ரஸித்தா।
யஸ்மாதஜாத இதி மந்த்ர வரோபதிஷ்டாத்
தம் ருத்ரமேவ ஜனித: சகித: ப்ரபத்யே ॥

(பொருள்) இந்த ஐந்து சுலோகங்களால் எல்லா தேவர்களுக்கும் மிகச்சிறந்தவர், அனாதியானவர். பரமசிவனே என்பதை வேதம், ப்ரும்மஸூத்ரம், புராணங்கள் இவைகளைக் கொண்டு தீர்மானிக்கின்றார்.

தாமரையில் அமர்ந்த பிரம்மதேவனும் "பூதஸ்யஜாத: பதிரேக ஆஸீத்" என்றும் விஷ்ணுவிற்கு "ஜாதோ ப்ருஹந்" என்றும் வேதம் பிறப்பை கூறுகின்றது. "அஜாதோ ருத்ர" என்று சிவன் பிறப்பற்றவன் என்றும் கூறுகிறது. ஆதலால் பிறப்பிலிருந்து பயந்து நான் அந்த சிவனையே சரணமடைகிறேன்.

उक्त्वा प्रसूतिमज शौरि हरेश्वराणां
संसूच्यदीपक सहोक्तिभिरन्यनिघ्नाम् ।
तां सन्यधारयद थर्वशिखा हियस्य
तं सर्वकारण मनादि शिवं प्रपद्ये ॥२॥

உக்த்வா ப்ரஸூதிமஜசௌரி ஹரேச்வராணும்
ஸம்ஸூச்யதீபக ஸஹோக்திபிரன்யநிக்ஞும் ।
தாம் ஸன்யதாரயதத்ர்வசிகா ஹி யஸ்ய
தம் ஸர்வகாரண மஞதி சிவம் ப்ரபத்யே ॥ 2

அதர்வ சிகோபநிஷத்தில் "ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ரா தேஸம்பர ஸூயந்தே, ஸர்வாணி சேந்த்ரியாணி ச ஸஹபூதை: ந காரணம், காரணாநாந் தாதா, த்யாதா, காரணந்து த்யேய: ஸர்வைச்வர்ய ஸம்பந்ந: ஸர்வேச்வர: சம்புராகாசமத்யே" என்று ப்ரும்மாதி தேவர்கள் உண்டாகின்றனர் என்பதை ப்ரஸ்துதமான ப்ரஹ்மாதிகளேயும் அப்ரஸ்துதமான இந்த்ரியங்களேயும் சேர்த்துக் கூறுவதால் தீபாலங்காரம் ஸஹபூதை: என்பதால் ஸஹோத்யலங்காரம். இரு அலங்காரங்களால் மற்றவருக்கு பிறப்பையும், சிவனுக்கு பிறப்பில்லாமையையும் கூறி அந்த சம்பு ஹ்ருதயாகாசத்தில் தியானம் செய்யத் தகுந்தவர். அவரே எல்லாவற்றிற்கும் காரணம் என்று தீர்மானிக்கின்றது.

वेदान्तेषु प्रथम भवनं वर्णितं यस्य याभ्यां
तद्वत्तस्य प्रसव वचसा जन्म तत् ख्यापयित्वा
यस्यैकस्य स्फुटमजनिता निश्चिता कारणस्य
ध्यायामस्तं जनिविहतये शम्भुमाकाशमध्ये ॥३॥

வேதாந்தேஷு ப்ரதம பவனம் வர்ணிதம் யஸ்ய யாப்யாம்
தத்வத் தஸ்ய ப்ரஸவவசஸா ஜன்ம தத் க்யாபயித்வா।
யஸ்யைகஸ்ய ஸ்புடமஜனிதா நிச்சிதா காரணஸ்ய
த்யாயாமஸ்தம் ஜனிவிஹதயே சம்புமாகாச மத்யே ॥

(பொருள்) "ஏகோ அவை நாராயண ஆஸீத்" என்று வேதாந்தங்களில் நாராயணன் ஒருவன் இருந்தான் அவனிடம் இருந்து மற்றவர் உண்டாயினர் என்று பிரும்ம ருத்ரர்களே விட முன் இருந்தார் நாராயணன் என்பதையும் வேதங்கள் கூறுகின்றன.

ஆனால் உண்டானார் என்று கூறுவதால் பிரமாதிகளுக்கும் முதலில் இருந்தார் என்று அர்த்தம் சொல்லலாம். இங்கு ருத்ரன் உண்டானான் என்றால் ஸம்ஹார ருத்ரன் என்று அர்த்தம் எல்லாவற்றிற்கும் மூலமான சிவன் "அஜாதா:" என்று உண்டாவதில்லை என்று விளக்குகிறது. ஆகையால் பிறப்பின்மைக்காக அந்த சம்புவை ஹ்ருதயத்தில் தியானம் செய்கின்றோம்.

यद् भ्रूभंगैकवश्यानिधिहरि गिरिशख्यातिदाशशक्ति
कोटयः
यद् भृत्यादेव देवास्सकल भुवनगास्सन्नियच्छन्ति विश्वम्
यल्लिङ्ग सर्वदेवासुर मनुज मुखैः रर्च्यते विश्वरूपम्
तस्मै नित्यं नमस्यांप्रवितनुत परब्रह्मणेशंकर ाय॥४॥

யத் ப்ருங்கைக வச்யா விதிஹரி கிரிச
க்யாதிதாச் சக்தி கோட்ய:
யத் ப்ருத்யாதேவ தேவாஸ் ஸகல புவனகா:
ஸந்நியச்சந்தி விச்வம் ।
யல்லிங்கம் ஸர்வ தேவாஸுர மனுஜ முகை:
அர்ச்யதே விச்வரூபம்
தஸ்மை நித்யம் நமஸ்யாம் ப்ரவிதனுத
பரப்ருஹ்மணே சங்கராய ॥

(பொருள்) வராஹ புராணத்தில் ருத்ர சக்திகள் ஒன்பது கோடி தாமஸ சக்திகள், விஷ்ணு சக்திகள் பதினெட்டு கோடி ராஜஸ சக்திகள், பிரும்ம சக்திகள், எண்ணற்ற ஸாத்விக சக்திகள் இவைகள் எல்லாவற்றையும் அவ்வளவு உருவங்களுடன் இருந்து அடக்கி ஆளுகிறார் பரமேச்வரன் என்றும் சிவபுராணத்தில் பூமியிலும், அந்தரிக்ஷத்திலும், ஸ்வர்க்கத்திலும் உள்ள நம்மைக் காப்பவர்கள். ஸாம ருத்ரத்தில் கூறப்பெற்றவர்கள் பரம சிவனுடைய

கிங்கரர்கள் என்று கூறப்பட்டுள்ளது. அங்கு திக்ஷுஸத: ஆசாஸத: என்று பிரும்மாண்டத்தைக் காட்டிலும் வெளியிலுள்ளவர்களும் சிவ ப்ருத்யர்கள் என்று கூறப்படுகிறது. சிவபுராணம் வாயு ஸம்ஹிதையில் லிங்காகாரமான சிவனிடமிருந்து பிரும்ம விஷ்ணு ருத்ரர்கள் மற்றுமுள்ள தேவர்கள் உண்டாகின்றனர். எல்லோரும் சிவலிங்கத்தை ஆராதிக்கின்றனர் என்பது விளக்கமாய் கூறப்பட்டுள்ளது. அவ்விதம் பெருமை பொருந்திய பரப்ரம்மமான சங்கரனுக்கு நமஸ்காரம் செய்யுங்கள். (நமஸ்கார ப்ரியன் சிவன்)

आस्तां सूक्ष्मं लिङ्गरूपत्वलिङ्गं
स्याद् ब्रह्मेशानाख्ययैवाल्प मात्रम्
इत्येवेनावेदयत्सूत्रकारो
यंब्रह्माख्यं तं प्रपद्ये महेशम् ॥५॥

ஆஸ்தாம் ஸூக்ஷ்மம் லிங்கரூபத்வ லிங்கம்
ஸ்யாத் ப்ரஹ்மேசானாக்யைவால்ப மாத்ரம் ।
இத்யேவேனுவேத யத்ஸூத்ர காரோ
யம்ப்ரும்மாக்யம் தம் ப்ரபத்யே மஹேசம் ॥

(பொருள்) இவ்வளவு புராணங்களில் லிங்கரூபியான சிவனே காரணம் என்பது லிங்கங்களால் தீர்மானித்த பொழுது ப்ரும்ம ஸூத்ரத்தில் சப்தா தேவப்ரமித: என்ற இடத்தில் ஈசான சப்தமே சிவன் காரணம் என்பதை விளக்குகிறது என்று ஏன் சொன்னார் என்றால் கஷ்டப்பட்டு பல புராணங்களைத் தேடி கண்டுபிடிக்கத் தேவையில்லை. சப்தமே போதும் என்பதை ஸூத்ரகாரர் வியாஸர் கூறுகிறார். சப்தத்தை தவிர்த்து மற்றது இல்லையென்பதை சொல்லவில்லை. இவ்விதம் வேதாந்தங்களிலும் பிரம்ம ஸூத்ரத்திலும் புராணங்களிலும் உலகிற்கு காரணமான ப்ருஹ்மம் பரமசிவனே என்று கூறப்பட்டுள்ளதால் அவரையே சரணமடைகிறேன்.

இந்த ஐந்து சுலோகங்களில் ஜனனம் மரணம் என்ற

மஹா பயத்தைப் போக்கிக் கொள்வதற்கு ஜனனத்திற்கு காரணமான மன்மதனையும் மரணத்திற்கு காரணமான காலனையும் அழித்து பரமசிவன் ஒருவனையே சரணமடைய வேண்டும் என்பதை ச்ருதி ஸ்ம்ருதி புராணங்களைக் கொண்டு மிக ஆழ்ந்த யுக்திகளால் ஸ்தாபித்தார் தீக்ஷிதரவர்கள்.

ஸ்ரீ நிக்ரஹாஷ்டகம்

मार्गे सहायं भगवन्तमेव
विश्वस्य विश्वाधिक निर्गतोस्मि ।
शास्त्रं प्रमाणं यदि सा विपत्स्यात्
तस्यैव भन्दो यं चिकीर्षेत् ॥१॥

மார்க்கே ஸஹாயம் பகவந்த மேவ
விஶ்வஸ்ய விஶ்வாதிக நிர்கதோஸ்மி!
ஶாஸ்த்ரம் ப்ரமாணம் யதி ஸா விபத்ஸ்யாத்
தஸ்யைவ பந்தோ மயி யாம் சிகீர்ஷோத்!! 1

மார்க்கபந்துவான பகவானை நம்பிக் கிளம்புகிறேன். உலகிற்கு மேலானவரே! ஶாஸ்த்ரம் ப்ரமாணமானால் எனக்கு யார் எந்த தீங்கைச் செய்ய நினைக்கிறானோ அவனுக்கே அந்த ஆபத்து உண்டாகட்டும்

कान्तारे प्रान्तरे वा मदकुशलकृतं सादरं सान्तरगं
मह्यं द्रुह्यन्तं अन्तं गमयतु भगवान्तस्यान्तकारी
क्षिप्रं विप्राधमस्य क्षिपतु च तदुदरयेव मायाविवर्तीन्
आर्त्तान् बंधूनबंधूनपि मम शिशिराभ्यंतरान् सतनोतु ॥

காந்தாரே ப்ராந்தரேவா மதகுமலக்ருதம் ஸாதரம்
ஸாந்தராங்கம்
மஹ்யம் த்ருஹ்யந்தம் அந்தம் கமயதுபகவாந்த
கஸ்யாந்தகாரீ!
க்ஷிப்ரம் விப்ராதமஸ்ய க்ஷிபது ச ததுதரஸ்யேவ
மாயாவிவர்தீன்
ஆர்தான் பந்தூனபந்தூன் அபிமம மிமிராப்யந்
தூரான்ஸந்தநோது!! 2

காட்டிலோ நாட்டிலோ மதத்தால் ஸாமர்த்யமாய் எனக்குச் செய்த துரோகத்தை பரமசிவன் அவருக்கே போகும்படி செய்யட்டும். என் வயிற்றிற்கும் எனது பந்துக்களுக்கும் பாபி செய்த தீங்கைப் போக்கி எல்லோரும் சுகமாக இருக்கும்படிச் செய்யட்டும்.

सहस्रं वर्तन्तां पथि पथि परे साहसकृतः
प्रवर्तन्तां बाधं मयि विविधमप्यारचयितुम् ।
न लक्षी कुर्वेऽहं नलिनजलिपि प्राप्तमपि तत्
मम स्वामी चामीकर शिखरि चापोऽस्ति पुरतः ॥३॥

ஸஹஸ்ரம் வர்தந்தாம் பதி பதி பரே ஸாஹஸ க்ருத:
ப்ரவர்த்தந்தாம் ப்ரதம் மயி விவிதமப்யார சயிதும்!
ந லக்ஷீ குர்வேஹம் நளிநஜலிபி ப்ராப்தமபி தத்
மம ஸ்வாமீ சாமீகர மிகரிசாபோஸ்தி புரத:!! 3

எனக்கு ஸாஹஸமான தீங்கிழைப்பவர் ஒவ்வொரு வழியிலும் ஆயிரம்பேர் இருக்கட்டுமே! பலவகைக் கஷ்டங்களைத் தரத்தான் முயற்சிக்கட்டுமே! அவைகளை பிரும்மா என் தலையெழுத்தாக அமைத்திருந்தாலும் அதை யான் லக்ஷ்யம் செய்ய மாட்டேன். மேரு மலையை வில்லாக கொண்ட ஸ்வாமி என் முன்னே இருக்கிறார்.

कण्ठ रुद्राक्षमालां भसितं अतिसितं फालदेशे च पश्यन्
नश्यन्नेव क्रुधायः तदपहृतिमतिं सत्सु कुर्वीतगुर्वीम्।
तत्कालात्तूर्णमायुर्लिखितमसुगणं चापि तत्कण्ठदेशात्
क्रुद्धास्ते ह्युद्धरेयु निजपदकमलांगुष्ठ लीलाविलासैः ॥४॥

கண்டேருத்ராக்ஷமாலாம் பஸிதம் அதிஸிதம்
பாலதேஶே ச பஶ்யன்
நஶ்யன்னேவ க்ருதாய: ததபஹ்ருதிமதிம்ஸத்
ஸுகுர்வீதகுர்வீம் !
தத்பாலாத் தூர்மணமாயுர்லிகிதமஸுகணம் சாபி
தத்கண்ட தேசாத்
க்ருத்தாஸ்தேஹ்யுத்தரேயு: நிஜபதகமலாங்குஷ்ட
லீலாவிலாஸை: !! 4

கழுத்திலுள்ள ருத்ராக்ஷ மாலையையும், நெற்றியில் வெண்ணீரையும் பார்த்துக் கோபத்தால் அவைகளையகற்ற யார் பலமான முயற்சி செய்தானோ, அவனது தலையெழுத்தையும் கழுத்திலிருந்து ப்ராணனையும் பகவானது தூதர் பாத கமல லீலையால் அகற்றி விடுவார்.

संकल्प्य स्थाणुशास्त्र प्रचरण विहतीः स्वेन्कार्याभिवीति
श्मश्रूणि स्वैरमश्रूण्यपि दृशि महतां स्पर्धया वर्धयन्तः।
क्षुद्रं विद्रावयेयुः झटिति वृषपति क्रोधनिश्वासलेशाः
शास्त्रं शैलादि भृत्याः तनुयुः अखिलभूमण्डलव्याप्तमेतत् ॥ ५॥

ஸங்கல்ப்ய ஸ்தாணுஶாஸ்த்ர ப்ரசரணவிஹ்ருதீ:
ஸ்வேநகார்யாபுவீதி
ஶர்மருஶ்ருணிவைரமஶ்ருண்யபித்ரிஶிமஹ்ருதாம்
ஸ்பார்த்தயாவர்த்யந்த !
க்ஷுத்ரம்வித்ராவயேயு: ஜ²டிதிவிருஷபதிக்ரோத
நிஶ்வாஸலேஶா
ஶஸ்த்ரம் ஶைலாதிப்ருத்யா:தனுயு அகிலபூமண்டல
வ்யாப்தமேதத் !! 5

ஶைவ சாஸ்த்ர ப்ரசாரத்தைத் தடுப்பது தன் கடமை என ஸங்கல்பம் செய்து கொண்டு தாடியை வளர்ப்பவரையும் போட்டியினுல் சாதுக்கள் கண்ணீரைப் பெருகும்படிச் செய்பவர்களையும் பசுபதியின் கோபத்தால் உண்டாகும் மூச்சுக்காற்றின் லேஶம் ஓடும்படி செய்யும், ஸகல பூமண்டலத்தையும் வியாபித்துப் போகும்படி நந்தி முதலியோர் சஸ்த்ரத்தை ஏவுவர்.

क्वचिदवयवे दग्धं कांश्चित् बलादनुचिन्तयन्
निरसनमितोदेशात् कर्तुं महेश्वर माश्रितान् ।
प्रमथ परिषत् क्रोधाद्दग्धाखिलावयवः स्वयं
निरसनमितो लोकादेव क्षणेन समश्नुताम् ॥६॥

க்வசிதவயவே தக்தும் காம்ஶ்சித் பலாதனுசிந்தயன்
நிரஸநமிதோ தேஶாத் கர்தும் மஹேஶ்வர
மாஶ்ரிதான் !
ப்ரமத பரிஷத் க்ரோதாத்தக்தாகிலாவயவ: ஸ்வயம்
நிரஸநமிதோ லோகோதேவ க்ஷணோ
ஸமஸ்னுதாம் !! 6

ஓர் அவயவத்தில் பலாத்காரமாக சிலருக்கு தப்த முத்ரையிடுவதற்காக பரமசிவனை ஆஶ்ரயித்தவரை இந்த இடத்திலிருந்து விரட்ட நினைப்பவரை ஶிவகணம் கோபத்தினுல்

எல்லா அவயவங்களும் பற்றி எரியும்படி இந்த லோகத்திலிருந்து வேறு லோகத்திற்கனுப்பிவிடும்.

काल प्रतीक्षा तु न तस्य कार्या
पुलस्त्य पुत्रादिवत् अन्तकारे ।
त्वदाश्रित द्रोह कृतोद्यमानां
सद्यः पतेदेव च मूर्ध्नि दण्डः ॥७॥

கால ப்ரதீக்ஷா து ந தஸ்ய கார்யா
புலஸ்த்ய புத்ராதிவத் அந்தகாரே!
த்வதாஸ்ரித த்ரோஹ க்ருதோத்யமாநாம்
ஸத்ய: பதேதேவ ச மூர்த்னி தண்ட:!! 7

அந்தகனை சிக்ஷித்தவரே! ராவணாதிகளை சிக்ஷிக்கச் சிறிது காலம் தாமதித்தது போல் சிவ பக்தர்களுக்குத் துரோஹம் செய்பவர் விஷயத்தில் தாமதிக்காமல் அவருக்கு உடனே சிக்ஷை செய்யும்.

सकल भुवनकर्ता साम्बमूर्तिः शिवश्चेत्
सकलमपि पुराणं सागमं चेत् प्रमाणम् ।
यदि भवति महत्वं भस्मरुद्राक्षभाजाम्
किमिति न मृतिः अस्मत् द्रोहिणः स्यादकांडे ॥८॥

ஸகலபுவநகர்தா ஸாம்பமூர்த்தி: ஶிவஶ்சேத்
ஸகலமபி புராணம் ஸாகமம் சேத் ப்ரமாணம்!
யதிபவதி மஹத்வம் பஸ்மருத்ராக்ஷபாஜாம்
கிமிதி ந ம்ருதிரஸ்மத் த்ரோஹிண:
ஸ்யாதகண்டே!! 8

ஸர்வலோகத்திற்கும் கர்த்தா ஸாம்ப பரமேச்வரனேதான். ஆகமங்களுடன் ஸர்வபுராணமும் ப்ரமாணமே. பஸ்ம ருத்ராக்ஷதாரிகளுக்கும் மஹிமை நிச்சயமாக உண்டு. அதனுல் த்ரோஹிகள் அழிவதும் நிச்சயமே.

கங்காதராஷ்டகம்

க்ஷீராம்போநிதி மந்தநோத்பவவிஷாத் ஸந்தஹ்யமா
நான்ஸுரான்
ப்ரஹ்மாதீநவலோக்ய ய கருணயா ஹாலாஹலா
க்யம் விஷம் ॥
நிச்சங்கம் நிஜலீலயா கபளயன் லோகான் ராக்ஷாதராத்
ஆர்த த்ராண பராயணஸ்ஸ பகவான் கங்காதரோ
மே கதி: ॥ 1

திருப்பாற்கடலைக் கடையும்போது உண்டான விஷத்திஞல் தபிக்கின்ற பிரம்மாதி தேவர்களைக் கண்டு மிகக் கருணையுடன் ஹாலாஹலமென்னும் விஷத்தை யோசனையின்றி விளையாட்டாக உட்கொண்டு உலகங்களைக் காப்பாற்றியவரும் துயருற்றி ருக்கின்றவர்களைக் காப்பதையே லக்ஷ்யமாய்க் கொண்ட வருமான கங்காதரே எனக்கு அடைக்கலம்

க்ஷீராம்ஸ்வாது நிபீய மாதுலக்ருஹே புக்த்வா ஸ்வகீயம்
க்ருஹம்
க்ஷீராலாபவசேந கிந்நமநஸே கோரம் தப குர்வதே॥
காருண்யாதுபமந்யவே நிரவதிம் க்ஷீராம்புதிம்
தத்தவான்
ஆர்த த்ராண பராயணஸ்ஸ பகவான் கங்காதரோ
மே கதி ॥ 2

உபமன்யு மஹரிஷியானவர் தனது அம்மான் வீட்டில் சுவையான பாலை அருந்தி ஸுகமாய் வாழ்ந்து விட்டுத் தனது வீட்டையடைந்து பிறகு பால் கிடைக்காமையால் வருந்திய மனதுடன் கடுமையான தவத்தைச் செய்தார். அவருக்குத் தமது கருணையால் கரைகடைந்த பாற்கடலையே அளித்தவரும், துயருற்றிருக்கின்றவர்களைக் காப்பதையே லக்ஷ்யமாய்க் கொண்டவருமான கங்காதரரே அடைக்கலம்

ம்ருத்யும் வக்ஷஸி தாடயந்நிஜபத த்யானைக பக்தம்
முநிம்
மாக்கண்டேயமபாலயத் கருணயா லிங்காத்விநிர்
கத்ய ய ||
நேத்ராம்போஜ ஸமர்ப்பணேந ஹரயேபீஷ்டம் ரதாங்கம்
ததௌ
ஆர்த த்ராண பராயணஸ்ஸ பகவான் கங்காதரோ
மே கதி || 3

மார்க்கண்டேயர் சிவபெருமானைத் தியானம் செய்து வழிபடும்போது காலன் வந்து கவர்ந்தான், அப்பொழுது லிங்கத்திலிருநது க்ருபையுடன் ஆவிர்பவித்து யமனை மார்பில் உதைத்து அந்த மார்க்கண்டேயரைக் காத்தவரும், ஆயிரம் தாமரை மலர்களால் அர்ச்சனை செய்வதாய் நினைத்து பூஜை செய்த திருமால் ஒரு மலர் கிடைக்காத போது தாமரை போன்ற தன் கண்ணைக் கொண்டே அர்ச்சனையைப் பூர்த்தி செய்ததைக் கண்டு மனம் குளிர்ந்து அவர் விரும்பிய சக்ராயுதத்தை அளித்தவரும், துயருற்றிருக்கின்றவர்களைக் காப்பதையே லக்ஷ்யமாய்க் கொண்டவருமான கங்காதரரே எனக்கு அடைக்கலம்.

வோடும் த்ரோண ஜயத்ரதாதி ரதிகைஸ்ஸைன்யம்
மஹத் கௌரவம்
த்ருஷ்ட்வா க்ருஷ்ணஸஹாயவந்தம்பி தம் பீதம்
ப்ரபன்னார்திஹா
பார்தம் ரக்ஷிதவாநமோக விஷய திவ்யாலஸ்த்ர
முத்யோதயன்
ஆர்த த்ராண பராயணஸ்ஸ பகவான் கங்காதரோ
மே கதி || 4

4, மஹாபாரத யுத்தத்தில் துரோணாசார்யார் ஜயத்ரதன் முதலிய மஹாரதர்கள் அடங்கிய பெரிய கௌரவ ஸைன்யத்தைக் கண்டு ஸ்ரீ கிருஷ்ணன் ஸஹாயமாக இருந்தும் பயந்த அர்ஜுனனை சத்ருஜயத்தில் வீண்போகாத அஸ்திரத்தை ஞாபகப்படுத்தி எதிரிகளை அழித்தவரும் துயருற்றிருக்கின்றவர்களைக் காப்பதையே லக்ஷ்யமாய்க் கொண்டவருமான கங்காதரரே எனக்கு அடைக்கலம்,

பாலம் சைவகுலோத்பவம் பரிஹஸத்ஸ்வக்ஞாதி
பக்ஷாகுலம்
கித்யந்தம் தவமூர்த்நி புஷ்பநிசயம் தாதும்
ஸமுத்யத்கரம்
த்ருஷ்ட்வா நம்யவிரிஞ்சிரம்யநகரே பூஜாம் த்வதீயாம்
பஜன்
ஆர்தத்ராண பராயணஸ்ஸ பகவான் கங்காதரோ மே
கதி ॥ 5

விரிஞ்சிபுரமென்ற க்ஷேத்ரத்தில சிறு வயதுள்ள சிவாசார்ய குமாரன் தனது பூஜை முறையில் உயர்ந்த லிங்கத்தின் மீது அபிஷேகம். அர்ச்சனம் எவ்விதம் செய்ய முடியுமென்று தன்னைச் சார்ந்தவர் பரிஹாஸம் செய்ய. மிகவருத்தத்துடன் உமது தலையில் புஷ்பங்களை வைக்க முயற்சியுடன் கையை தூக்கி நிற்கும் பொழுது தலையை வளைத்து உமது பூஜையை ஏற்றுக் கொண்டீர், அத்தகைய துயருற்றிருக்கின்றவர்களைக் காப்பதையே லக்ஷ்யமாய்க் கொண்டவரான கங்காதரரே. எனக்கு அடைக்கலம்,

ஸந்த்ரஸ்தேஷு புரா ஸுராஸுர பயாதிந்த்ராதி
ப்ருந்தாரகேஷு
ஆரூடோ தரணீரதம் ச்ருதிஹயம் க்ருத்வாமுராரிம் சரம்
ரக்ஷந்ய க்ருபயா ஸமஸ்தவிபுதாத்ஜித்வா புராரீன்
க்ஷணாத்
ஆர்த த்ராண பராயணஸ்ஸ பகவான் கங்காதரோ
மே கதி: ॥ 6

திரிபுராஸுரர்களின் பயத்தினால் இந்திரன் முதலிய தேவர்கள் மிகவும் பயமடைந்தபொழுது பூமியைத் தேராகவும். வேதங்ளைக் குதிரைகளாகவும் விஷ்ணுவை அம்பாகவும் அமைத்துத் திரிபுரர்களை ஒரு கணநேரத்தில் அழித்துத் தேவர்கள் அனைவரையும் கருணையுடன் காப்பாற்றியவரும் துயருற்றிருக்கின்றவர்களைக் காப்பதையே லக்ஷ்யமாய்க் கொண்டவருமான கங்காததரே எனக்கு அடைக்கலம்.

ச்ரௌதஸ்மார்தபதோ பராங்முகமபி ப்ரோத்யந் மஹாபாதகம்
விச்வாதீசமபத்யமேவ கதிரித்யாலாபவந்தம் ஸக்ருத்
ரக்ஷந்ய கருணாபயோநிதிரிதி ப்ராப்தஸித்தி புராஹி ஆர்த
த்ராண பராயணஸ்ஸ பகவான் கங்காதரோ மே கதி: ॥ 7

வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்பட்ட கர்மாக்களை விட்டவனாயிருந்தாலும் மஹாபாதகங்களைச் செய்தவ னாயிருந்தாலும் உலகிற்கே ஈசனான கங்காதரனின் குழந்தை நான். அவனே எனக்கு புகலிடமென்று ஒருமுறை உரக்கச் சொல்லிவிட்டால் கருணைக்கடலான அந்த ஈசன் கட்டாயம் காப்பாற்றி விடுகிறார் என்று புகழ்பெற்றிருப்பவரும் துயருற்றிருக்கின்றவர்களைக் காப்பதையே லக்ஷ்யமாய்க் கொண்டவருமான கங்காததரே எனக்கு அடைக்கலம்.

காங்கம் வேகமவாப்ய மாந்யவிபுதைஸ்ஸோடும் புரா யாசிதோ
த்ருஷ்ட்வாபக்த பகீரதேன விநதோ ருத்ரோஜடா மண்டலே
காருண்யாதவநீதலே ஸுரநதீமாபூரயந் பாவநீம்
ஆர்தத்ராண பராயணஸ்ஸ பகவான் கங்காதரோ மே கதி: ॥ 8

கங்கையின் வேகத்தைத் தாங்க வேண்டுமென்று பல மஹனீயர்களால் வேண்டப்பட்டு ஒரு ஸமயம் பகீரதனின் பக்தியைக் கண்டு ஸந்தோஷித்து தனது ஜடாமண்டலத்தில் தாங்கி பரிசுத்தமான கங்கையைக் கருணையுடன் பூமியில் ப்ரவஹிக்கும்படிச் செய்தவரும், துயருற்றிருக்கின்றவர்களைக் காப்பதையே லக்ஷ்யமாய்க் கொண்டவருமான கங்காததரே எனக்கு அடைக்கலம். (கங்காதரர் அதாவது கங்கையைத் தலையில் தரித்தவர் என்பதன் பெயர்க் காரணம் இந்த சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது)

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர்கள் அருளிச் செய்த
ஸ்ரீ கங்காதராஷ்டகம் முற்றிற்று

தர்ம சாஸ்திரம்

ஸ்ரீ எஸ்.வி. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள்

தமிழில் வர்ணாசிரம தர்மம், ஆந்ஹிக தர்மம், சிராத்த முறை முதலியவற்றை சூழ்நிலைக்கேற்ப சுருக்கியும் தெளிவாகவும் தமிழில் அரிய நூல்களிலிருந்து திரட்டி தொகுத்தளித்துள்ள அரிய புத்தகம்

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் ஸ்லோகங்கள் விலை ரூ 15.00